பக்கங்கள் 4 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELANADU

மலர்: 19 ஆவணி 3 றம்ழான் 3 இதழ்: 189

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 19-8-77

# அகதிகள் இன்று

## யாழ். வருகின்றனர்!

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்த சிங்களமக்கள் நேற்றுப் பதினொரு பஸ்களில் பாதுகாப்புடன் அநுராதபுரத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அநுராதபுரத்தில் பொலிஸ் நிலையத்திலும் வேறு இடங்களிலும் தஞ்சமடைந்திருந்த தமிழ்மக்கள் இதே பஸ்களில் வவனியாவுக்குக் கொண்டு வரப்பட்டனர்.

இது தவிர வவனியா பஸ் டிப்போவிலிருந்தும சில பஸ்கள் அநுராதபுரத்தக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்குள்ள அகதிகள் வவனியாவிற்குக் கொண்டுவரப்பட்டனர். வவனியாவில் அவர்களுக்கு உணவு மற்றும் வசதிகள் அளிக்கப் பட்டன.

அநுராதபுரத்திலிருந்து அகதிகளாகவரும் தமிழ் மக்கள் முதலில் தங்குவதற்கு யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகா வித்தியாலயக் கட்டிடம் தற்

[3-ம் பக்கம் பார்க்க]

# கலகத்துக்கு என்ன காரணம்?

# விசாரிக்க குழு நியமிக்கப்படும்!

## அமிர் கேள்வி பிரதமர் பதில்

(கொழும்பு)

**யாழ்ப்பாணத்திலும், நாட்டின் வேறு சில பகுதிகளிலும் கடந்த சில தினங்களாக நடைபெற்று வந்த அசம்பாவிதங்கள் குறித்து, பூரண விசாரணைகள் நடைபெறும். இதற்காக விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்படும்.**

**எதிர்க்கட்சித்தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணிச்செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று தேசிய அரசுப்பேரவையில் யாழ். அசம்பாவிதங்கள் குறித்து கிளப்பிய பிரச்னைகளைத் தொடர்ந்து, பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, விசாரணைகளை நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.**

தேசிய அரசுப்பேரவை நேற்றுப் பிற்பகல் இரண்டு மணிக்கு சபாநாயகர் திரு. ஆனந்த திஸ டி அல்விஸ் தலைமையில் கூடியது. ஜனாதிபதியின் அரசுக் கொள்கைத் திட்ட உரை மீதான விவாதம் ஆரம்பமான போது தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் நல்லூர் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு மு. சிவசிதம்பரமும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் மதவாச்சி தேசிய



அரசுப்பேரவை உறுப்பினர் திரு. மைத்திரிபாலசேனநாயக்காவும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (அரசியல் பிரிவு) சார்பில் நுரரேலிய-மஸ்கேலியா மூன்றுவது தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு எஸ். தொண்டமானும் பல திருத்தப் பிரேரணைகளைச் சமர்ப்பித்தனர். இதற்கு முன்னர் திரு. அ. அமிர்தலிங்கம் யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக நடைபெற்ற - நடைபெற்று வரும் அசம்பாவிதங்கள் குறித்து விபரமாக விளக்கினார்.

திரு. அ. அமிர்தலிங்கம் அளித்த விளக்கம் மிகவும் நிதானமாகவும் விபரமாகவும் இருந்தது.

### "விசாரணைகள் நடத்த வேண்டும்"

யாழ்ப்பாணத்தில் தலை தூக்கிய பல்வேறு சம்பவங்கள் குறித்தும் பாகுபாடற்ற முறையில் நீதியின் அடிப்படையில் பூரணமான விசாரணைகள் நடைபெற வேண்டும் என்னும் இதற்காக விசாரணைக் கமிஷன் உடனடியாக நியமிக்கப்படவேண்டும் என்னும் திரு. அமிர்தலிங்கம் தனது உரையில் கேட்டுக்கொண்டார்.

திரு. அ. அமிர்தலிங்கம் நீண்ட நேரமாக உரை நிகழ்த்தியிருந்தார்.

### பிரதமர் உறுதி

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபரின் கோரிக்கையை பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன உடனடியாகவே ஏற்றுக்கொண்டு "யாழ்ப்பாண சம்பவங்கள் குறித்து பூரணமான விசாரணைகள் நடைபெற ஆணைக் குழு நியமிக்கப்படும்" என்று உறுதிமொழி அளித்தார்.

### "பாகுபாடற்ற விசாரணைகள்"

திரு. அ. அமிர்தலிங்கம் தேசிய அரசுப்பேரவையில் ஆற்றிய உரையைத் தொடர்



ந்து பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறியதாவது; "யாழ்ப்பாணத்திலும்

[3-ம் பக்கம் பார்க்க]

## யாழ். நகர் அமைதி! கவச மோட்டார் காவல்

யாழ்ப்பாணம், வெள்ளி நேற்று யாழ். நகரில் அசம்பாவித சம்பவங்கள் நிகழவில்லை.

சில இடங்களில் கூடிநின்ற மக்களைப் பொலிசார் இலேசாகத் தடியடிப் பிரயோகம் செய்து கலைத்தனர்

பிற்பகலில் இராணுவமும் கடற்படையும் நகரில் ரோந்து சுற்றி வந்தன.

இயந்திர மோட்டார் வண்டிகளில் இராணுவம் முக்கிய சந்திகளில் காவல் புரிந்தனர்.

யாழ். நகரில் சில இடங்களில் கொள்ளையடிக்கப் பட்ட பொருள்கள் சில பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளன.

கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களை மீட்பதில் இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### கச்சேரியில் புகார் செய்யலாம்

யாழ்ப்பாணத்தில் நடந்த தாக்குதல், தீவைப்பு, கொள்ளைச் சம்பவங்கள் பற்றிப் புகார் செய்வதற்குப் பொலிஸ் நிலையத்துக்குச் செல்வதற்குப் பொதுமக்கள் பயப்படுவதால் யாழ்ப்பாணம் கச்சேரியில் புகார் செய்வதற்கு வசதியாக அங்குள்ள மாநாட்டு அறையில் உதவிப் பொலிஸ் அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்துக்கு மூன்று புதிய உதவிப் பொலிஸ் அதிபர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

## ஐந்து இடங்களில் ஊரடங்குச் சட்டம்

இரண்டு இடங்களில் நேற்று முன்தினம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம் மேலும் மூன்று மாவட்டங்களுக்கு நேற்று விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

அனுராதபுரம், குருநாகலை ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் இரவு 8 மணி தொடக்கம் காலை 5 மணி வரை அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட ஊரடங்குச்சட்டம் தொடர்ந்து அமுலில் இருக்கும். நேற்று பாணந்துறை (இரவு 8 மணி முதல் காலை 5 மணி வரை) மாத்தளை (பிற்பகல் 4 மணி முதல் காலை 5 மணி வரை) பொலன்நறுவ (மாலை 4 மணி முதல் காலை 5 மணி வரை) ஆகிய இடங்களிலும் ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்பட்டது.

# மாண்டவர்கள் 14 பேர்!

# தமிழர் 8; சிங்களவர் 6

## கலகநிலைபற்றி பிரதமர் விளக்கம்

நேற்று நடைபெற்ற தேசிய அரசுப்பேரவை கூட்டத்தில் கடந்த சில நாட்களில் யாழ்ப்பாணத்திலும், நாட்டின்வேறு சில பகுதிகளிலும் நிகழ்ந்த அசம்பாவிதங்களினால் பலியானவர்கள் குறித்தும், சேத விபரங்கள் பற்றியும் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன ஒரு அறிக்கை சமர்ப்பித்தார்.

### மாண்டவர் தொகை

இந்த அசம்பாவிதங்களினால் மொத்தம் பதினான்குபேர் பலியானார்கள் என்று தெரிவித்த பிரதமர்; அனுராதபுரத்தில் நான்கு தமிழர்களும், யாழ்ப்பாணத்தில் நான்கு தமிழர்களும், அநுராதபுரத்தில் ஒரு சிங்களவரும், கலிகமுவவில் மூன்று சிங்களவர்களும், மாத்தளையில் இரண்டு சிங்களவர்களும் இறந்திருக்கின்றனர் என்றுகூறினார்.

### தற்பாதுகாப்புக்கு சுட்டனர்

சில பகுதிகளில் நிகழ்ந்த

(3-ம் பக்கம் பார்க்க)

# "கணக்குப் பதிவாளர் நியமனம் வழங்குக"
## பிரதமருக்குக் கோரிக்கை

உடுப்பிட்டி, வியாழன்

தொழில் நுட்பக் கல்லூரிகளில் பயின்று உயர்கணக்குப் பதிவாளர்களுக்கான வணிக தகுதிப் பத்திரம் பெற்ரேர் தமக்குத் திணைக்களங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் கணக்குப் பதிவாளர் நியமனம் வழங்கும்படி பிரதமரைக் கோரியுள்ளனர்

இதுசம்பந்தமாக, பிரஸ்தாப உயர்கணக்குப் பதிவாளர்க்கான வணிக தகுதிப் பத்திரம் பெற்றவர்கள் பிரதமர் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அம்மகஜரில், அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களின் கணக்குப் பதிவாளர் பதவி வெற்றிடங்களுக்கு, இப்பதவிக்குரிய துறையில் தொழில் நுட்பப் பயிற்சியும், தேர்ச்சியும சான்றுப்பத்திரமும் பெற்றுள்ளவர்கள் எவருமே நியமிக்கப்படவில்லை என்றும், இத்தராதரம் அற்றவர்களே நியமனம் செய்யப்பட்டனர் என்றும், பிரதமரிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: 'எமது வேலைவாய்ப்புப் பற்றிப் பல தடவைகள் கடந்த அரசாங்கத்திடம் மகஜர்கள் அனுப்பி வைத்தும் அவை கவனிப்பாரற்று அலட்சியப்படுத்தப்பட்டன. செல்வாக்கு மிக்கவர்களுக்கே எத்தராதரமும் இல்லாமல் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதனல் நாம் மிகவும் மனவேதனையும், விரக்தியும் அடைந்துள்ளதோடு மிகவும் கஷ்டம் அனுபவித்து வருகின்ருேம்.

ஆகவே புதிய அரசாங்கமாவது எமக்குக் கணக்குப் பதிவாளர் பதவிகளோ அல்லது எம்தராதரத்துடன் தொடர்பான பதவிகளோ வழங்கி விமோசனம் அளிக்கவேண்டும். கணக்குப்பதிவாளர் போன்ற பதவிகளுக்குக் கணக்குப்பதிவாளர் தராதரப்பத்திரம்பெற்றவர்களை மட்டுமே விண்ணப்பிக்க அனுமதிக்கவேண்டும்.

1976ம் ஆண்டு அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் இணைந்த சேவைகள் பகுதி 'கணக்குப் பதிவாளர்' சேவைக்கு ஆட்சேர்த்தலுக்கு விளம்பரப் பகுத்தி இருந்தது. இப்பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சை பலதினங்களாகநடாத்தப்பட்டது. ஆயினும், சுமார் 800க்கும் அதிகமானேர் இக்கணக்குப் பதிவாளர் பதவிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டபோதிலும் எம்மில் ஒருவருக்குத்தானும் இந்த நியமனம் வழங்கப்படவில்லை. இது எமக்கு மிகுந்த அதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியது. அவசரம் அவசரமாக நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு இரகசியமாக நியமனங்களும் வழங்கப்பட்டன.

இவ்விடயத்தில் உடன் கவனம் எடுத்து உயர்கணக்குப் பதிவாளர்க்கான தகுதிப்பத்திரம் பெற்றுள்ளவர்களுக்குப் பல்வேறுதிணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களிலும், இ.போ.ச.விலும் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்ருேம் என்று மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 'இந்திராவைக் கைதுசெய்து விசாரணை செய்யவேண்டும்'
## எதிர்காலப் பிரதமர்களுக்கு இது ஒரு பாடமாக இருக்கும் என்கிருர் நம்பூதிரிபாத்

புதுடில்லி, ஆக. 18

இந்திய அரசியல்சாஸனத்திற்கு விரோதமாக இயங்கியதற்காக முன்னுள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியைக் கைதுசெய்து விசாரணை செய்ய வேண்டும்.

இவ்வாறு இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் திரு நம்பூதிரிபாத் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்வாறு திருமதி இந்திரா மீது விசாரணை நடத்துவதன் மூலமே எதிர்காலத்திலும் பதவிக்கு வரும் பிரதமர்கள் மக்களின் ஆதார உரிமைகளை நசுக்கி அரசியல்சாஸனத்திற்கு விரோதமாக நடப்பதைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என்றும் திரு. நம்பூதிரிபாத் கூறினர்.

### "இந்திரா ஒதுங்கவேண்டும்"

இதே வேளையில், திருமதி இந்திராகாந்தி அரசியலில் இருந்து இப்போதைக்காவது ஒதுங்கியிருக்கவேண்டுமென்றும் தமது மகன் சஞ்சய் காந்தியை அரசியலுக்குள் மீண்டும் புகுத்த திருமதி காந்திமுயலக்கூடாதென்றும் மேற்கு வங்காள காங்கிரஸ் தலைவி திருமதி முகர்ஜிதெரிவித்தார். (இ)

### உகண்டா பிரஜைகளுக்கு
# தாய்நாட்டை முற்றுகையிட இஸ்ரேலில் பயிற்சி
## இடி அமின் குற்றச்சாட்டு

கம்பாலா, ஆக. 18

உகண்டாவிலிருந்து வெளியேறிய உகண்டா பிரஜைகளுக்கு தாய் நாட்டை முற்றுகையிடுவதற்காகஇஸ்ரேலில் தீவிரபயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு உகண்டா அதிபர் இடிஅமின் குற்றம்சாட்டியுள்ளார்.

பிரிட்டன், ஸாம்பியா, அமெரிக்கா ஆகிய நாடுகளிலும் உகண்டாப் பிரஜைகளுக்கு இராணுவப்பயிற்சி அளிக்கப் பட்டுவருவதாகவும்இடி அமின் குற்றம்சாட்டியுள்ளார். (இ)

### யாழ். ஆயுர் கல்லூரி
# தடை உத்தரவு வழக்கு 22ந் திகதிக்கு ஒத்திவைப்பு

வண்ணர்பண்ணை, வியா.

யாழ்ப்பாணம் லங்கா ஆயுர்வேதக் கல்லூரி நிர்வாகம் சம்பந்தமாக மேற்படி கல்லூரி நிர்வாகிகளிடையே யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு வரும் வழக்கை கடந்த ஒரு வாரகாலமாக தொடர்ந்து விசாரணை செய்த நீதிபதி திரு ஜே. ஜீ. ஆசீர்வாதம் தொடர்ந்து விசாரணை செய்வதற்காக 22-ம் திகதி திங்கட்கிழமைக்கு வழக்கை பின்போட்டுள்ளார்.

கடந்த ஒருவார காலமாக நடைபெற்ற இவ்விசாரணையில் மேற்படி கல்லூரியின் முன்னுள் பதிவாளரும் நிர்வாக அதிகாரியுமான ஆயுர்வேத டாக்டர் அ. கெங்காதரன் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்பட்டார்.

இவ்வழக்கு விசாரணையின் போது இவ்வழக்குடன் சம்பந்தப்பட்டிருந்த வட இலங்கை சுதேச வைத்திய சபையின் தலைவர் திரு. கு. விநோதன், இச்சபையின் செயலாளர் டாக்டர் ஆ. நடராசா ஆகியோரும் இக்கல்லூரியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவ மாணவிகளும் ஆயுர்வேத டாக்டர்களும் கோர்ட்டில் காணப்பட்டனர்.

மேற்படி கல்லூரின் நிர்வாகத்தை நடத்திவந்த வட இலங்கை சுதேச வைத்திய சபையின் தலைவராக இருந்து இடைக்காலத்தில் தனது பதவியை இராஜினுமா செய்த திரு. கு. விஞேதனைத்தொடர்ந்தும் இச்சபையின் தலைவராக ஏற்கப்பட்டது முறையற்றதென்றும் இவரது ராஜினுமாவை அங்கீகரிக்காது, இவரைத்தொடர்ந்தும் இப்பதவியில் இருக்குமாறு தீர்மானித்த 5-11-76-ம் திகதிய மேற்படி சபையின் கூட்டம் செல்லுபடியாகாதென்றும், இச்சபையின் தலைவரான திரு. கு. விஞேதனையும், செயலாளரான திரு. ஆ. நடராசாவையும், இக்கல்லூரியில் நுழைய அனுமதிக்கப்படாதென்றும் கோரி இதே கல்லூரியின் பதிவாளராகவும் நிர்வாக அதிகாரியாகவும் இருந்த ஆயுர்வேத டாக்டர் அ. கெங்காதரனுலும் இக்கல்லூரி நிர்வாகத்தைச் சேர்ந்த மற்றும் சிலரினுலும் தொடரப்பட்ட இவ்வழக்கு இம்மாதம் 8ம் திகதி முதல் இம்மாதம் 15-ம் திகதிவரை தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டது.

5-11-76-ம் திகதி அவசரமாக மூன்று நாள் தவணையில் கூடப்பட்ட மேற்படி சபையின் கூட்டம் சட்டப்படி செல்லுபடியாகும் என்றும், இக் கூட்டத்திற்குப் போதிய கோரம் இருந்ததென்றும், இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் சட்டப்படியும் கூட்ட ஒழுங்குப்படியும் ஏற்கப்படவேண்டியன என்றும் எதிரிதரப்பில் வாதிக்கப்பட்டது.

"மேற்படி நிர்வாகிகளுக்கெதிராக எடுக்கப்பட்ட தடை உத்தரவு முறைப்படி செல்லுபடியாகுமா? செல்லுபடியாகாதா என்ற முடிவை முதலில் ஆராயவேண்டும் என்று எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சண்முகலிங்கம் தெரிவித்தார். திங்கட்கிழமை நடந்த இவ்விசாரணையின் போது எதிரிகளின் மற்ரெரு சட்டத்தரணி திரு. கே. பத்மநாதன், வழக்காளிகளில் ஒருவரான டாக்டர் கெங்காதரனை தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்தார்.

வழக்காளிகள் சார்பில் சட்டத்தரணி திரு. சி. கதிரவேலுப்பிள்ளை, சட்டத்தரணி, திரு. எஸ். ஆர். கனகநாயகம், சட்டத்தரணி திரு. கே. கதிர்காமலிங்கம் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். (அ)

# ஆசிரிய கலாசாலையில் வகுப்புகள் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ் நகரில் இடம்பெற்ற பொலிஸ் அட்டூழியங்களுக்கு கண்டனம் தெரிவிக்குமுகமாக பலாலி ஆசிரிய கலாசாலையைச் சேர்ந்த ஆசிரிய மாணவர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை தமது விரிவுரைகளை பகிஷ்கரித்தனர். மாணவர்களால் நடாத்தப்பட்ட கண்டனக் கூட்டத்தில், சம்பந்தப்பட்டவர்கள் மீது பூரண விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பிரதம மந்திரியைக் கேட்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தின் பிரதிகள் நீதி அமைச்சர், கல்வியமைச்சர், பிரதிபாதுகாப்புஅமைச்சர் எதிர்க்கட்சித்தலைவர் பொலிஸ் மாஅதிபர், யாழ் அரசாங்க அதிபர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

# "10,000 பொற்ருெழிலாளருக்கு வாழ்வு அளிக்கவும்"

யாழ்ப்பாணம், வெள்ளி

'வடமாகாணத்தில் வாழும் 10,000க்கும் அதிகமான ஆபரணத்தொழிலாளர்களின் எதிர்காலம் இருண்டதாகவுள்ளது. இவர்களின வாழ்வு வளம்பெற புதிய அரசாங்கம் முன்புபோல் கோட்டாமுறையில் பவுண்விநியோகிக்கவும், உபகரணவகைகளை இலாபகரமாக வழங்கியும் தொழில்நுட்பப்பயிற்சி அளிக்கவும்வேண்டும்' எனக்கோரும் தீர்மானங்களை அரசினருக்கும் சகல தமிழ் எம். பீக்களுக்கும் வடமாகாண ஆபரணத்தொழிலாளர்சங்கம் அனுப்பியுள்ளது.

திரு த பாலகிருஷ்ணர்தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இத்தீர்மானங்கள் எடுக்கப்பட்டு அரசினருக்கும் தமிழ் எம். பீக்களுக்கும் அனுப்புவதென முடிவுசெய்யப்பட்டதற்கிணங்க இம்மகஜர் அனுப்பப்பட்டது. நகை செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள சகலதொழிலாளர்களுக்கும் சென்றகாலத்தைப்போல் விஸ்வகுல படித்த வாலிபர்களுக்கு அவர்களின் வருங்கால நன்மைகருதி தொழில்நுட்பக் கல்லூரிப்பிரவேசங்களில் கூடிய சலுகைகள் தந்து அவர்களுக்குப் போதிய வேலைவாய்ப்பு அளிக்கப்படவேண்டும் என்ற தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

(கெ-அ)

# யாழ். இந்து, இந்து மகளிர் கல்லூரிகள் மூடப்பட்டன

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி ஆகிய இரண்டும் மாணவர் வரவு குறைவு காரணமாக இன்றுடன் மூடப்பட்டுள்ளன. செப்டம்பர் மாதம் 14-ம் திகதி புதன் கிழமை இவை மீண்டும் ஆரம்பமாகுமென்றும் உள்ளூர்பெற்ருேர் விடுதி மாணவர்களை விடுகளுக்கு அழைத்துச்செல்ல ஏற்பாடுகள் செய்யும்படியும் இரு அதிபர்களும் அறிவித்துள்ளனர். (அ)

# பஸ் தீக்கிரை!
(பண்டத்தரிப்பு)

இ. போ. ச. பஸ் ஒன்று நேற்று முன்தினம் நண்பகல் அளவெட்டியில் வைத்து தீக்கிரையாக்கப்பட்டது.

பருத்தித்துறைக்கும் மூளாய்க்கும் இடையே சேவையில் ஈடுபட்டிருந்த பஸ்ஸே தீக்கிரையாக்கப்பட்டது.

மூளாயிலிருந்து பருத்தித்துறைநோக்கிச்சென்றுகொண்டிருந்த இந்த பஸ்ஸை பெரிய விளானில் வைத்து மறித்த இளைஞர் கோஷ்டி ஒன்று பிரயாணிகளையும், பஸ் சாரதியையும், கண்டக்டரையும் பயமுறுத்தி கீழே இறக்கிவிட்டு பஸ்ஸைத் தாமே ஓட்டிச்சென்றதாம். பின்னர் அளவெட்டி வடக்கில் கீரிமலைக்கு செல்லும் சிறியவீதிக்கு சமீபமாகவுள்ள பனைக்கூடலுக்குள் பஸ் நிறுத்தப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

பஸ் முற்ருக எரிந்து சாம்பலான நிலையில் காணப்பட்டது. (இ)

# தீவுத்தொகுதியில் ஐ.தே. க. கிளைகள்

வண்ணர்பண்ணை, வியா

தீவுப்பகுதியில் ஐக்கியதேசிய கட்சிக்கிளைகள் அமைக்கும் வேலைகள் தீவிரமடைந்துள்ளன பல இடங்களிலும் கிராமம் கிராமமாக இக்கிளைகள் தொடக்கப்பட்டு வருகின்றன.

இக்கிளைகளில் பலர் சேர்ந்து இயங்குவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்" என்று இக்கிளை அமைப்பில் ஈடுபட்டுள்ள முக்கிய பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (அ)

### மறியல் செய்த
# 900 பேர் கைது!

சென்னை, ஆக. 18

தமிழ் நாடு சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர் திரு. கோபால் உட்பட 900 கைத்தறி நெசவாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 15 நாட்களாக அரசாங்கஅலுவலகங்களுக்கு முன்னுல் அதிக சம்பளம் கோரி மறியல் செய்தமையினுலேயே நேற்று இவர்கள் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். (இ)

# இளைப்பாறுகிருர்

அரியாலை, வியாழன்

கொழும்பு அத்தியட்சாதீனை ஆயர் அதி வணக்கத்துக்குரிய சிறில் அபயநாயக்கா ஆண்டகை நவம்பர் மாதம் 30ந் திகதியுடன் இளைப்பாறுகிருர்.


# சிந்தெட்டிக் கற்பூரம்
## பெட்டிகளில்

கிடைக்குமிடம்:

## சென்ற் அந்தனிஸ் ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்

516, ஸ்கின்னர்ஸ் ரேட்டுத் தெற்கு, கொழும்பு - 10

போன்: 24261-5

## வரி விளம்பரம்

### தேவை

வேப்பம் விதைகள், இலுப்பை விதைகள், ஆமணக்கம் விதைகள் [தொகையாகத் தேவை. விலை விபரங்களுடன் தொடர்புகொள்ளவும். எஸ். சுப்பிரமணியம் அன் கம்பனி, 53, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 541. 6794

### விற்பனைக்கு

புத்தொளி எழுதிய 1977 பொதுத்தேர்தல் முடிவுகள் கூடும் சுவையுமான வெற்றிகளும் தோல்விகளும் அடங்கிய நூல் நாளை நமதே விலைசதம் 1 தமயந்தி பதிப்பகம் அச்சுவேலி. த.சிவபாதம் புத்தொளி, அச்சுவேலி 6867

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### கேள்வி அறிவித்தல்

13-8-77-ம் திகதிய ஈழநாட்டில் வெளிவந்த எமது 12-8-77ம் திகதிய அறிவித்தலின் தொடர்பாக நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழாக்கால தற்காலிக சந்தையில் கடைகளை வாடகைக்குக் கொடுப்பது சம்பந்தமான கேள்விகள் பெற்றுக்கொள்ளப்படும் திகதி 22-8-77-ம் திகதி திங்கட்கிழமை காலை 11-30 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது. கேள்விப் பத்திரங்கள் 22-8-77-ம் திகதி காலை 10-30 மணிவரை வழங்கப்படும்.

க. சிவஞானம்
மாநகராட்சி
மன்ற ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

நகர மண்டபம்,
யாழ்ப்பாணம்.
18-8-77 6874

**ST JOHN'S COLLEGE AND CHUNDIKULI GIRLS COLLEGE, JAFFNA**

Both Schools closed for the Vacation. Date of re-opening Monday the 5-th Septmber, 1977 Boarders return-Sunday the 4th September, 1977.

Principals.

6875

### ஏலத்தில் 3 வீடுகள்

வண்ணார்பண்ணை, வியா.

தேசிய வீடமைப்பு இலாகாவில் கடன் பெற்று கட்டப்பட்ட மூன்று பெரிய வீடுகள் ஏலத்தில் விற்பனை செய்யப்படவிருக்கின்றன.

உரியதவணையில் கடன் பணத்தைக் கட்டத் தவறிய காரணத்தால் இவ்வீடுகளைவிற்பனை செய்ய வேண்டிய நிலை இவ்விலாகாவிற்கு ஏற்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு இலாகா உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

இவ்வீடுகளைக் கட்டுவதற்கு பெற்ற பணத்தை திருப்பிச் செலுத்துவதற்கு கொடுக்கப்பட்ட தவணையிலும் பார்க்க மேலும் தவணை கொடுத்தும் கட்டத்தவறியதால் இவ்விலாகா இந்த விற்பனைக் கட்டளையை பிறப்பித்துள்ளதாக தெரிகிறது.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# கூட்டணிக்கும் கலகத்துக்கும் தொடர்பில்லை

## பேரவையில் 'அமிர்' விளக்கம்

கொழும்பு, வியா

யாழ்ப்பாணத்தில் நடந்த கலவரங்களுக்கும் தமிழர்விடுதலைக் கூட்டணிக்கும் எவ்வித தொடர்புமில்லை யென்றும் அங்குள்ள பொலிசாரில் ஒரு பிரிவினரின் செயல்களே இதற்குக் காரணமென்றும் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயல் அதிபரும் எதிர்க் கட்சித் தலைவரும் காங்கேசன் துறைப் பிரதிநிதியுமான திரு. அ. அமிர்தலிங்கம் இன்று தேசிய அரசுப் பேரவையில் பேசுகையில் கூறினார்.

யாழ். நகரில் நடந்த களியாட்ட விழாவொன்றில் சில பொலிசார் நடந்து கொண்ட செயலிலிருந்தே கலகம்தொடங்கக் காரணமென்று குறிப்பிட்ட திரு. அமிர்தலிங்கம் தமிழ் மக்களை நேசக்கரம்நீட்டும்படி அரசாங்கம் கேட்கிறது அதே சமயம் தமிழ்ப் பகுதிகளில் இரும்புக்கரம் நீட்டப்படுகிறது என்று கூறினார்

யாழ். நகரில் கடைகளுக்குத் தீ வைத்தது சில பொலிசாரே என்று கூறிய திரு. அமிர்தலிங்கம் இப்பகுதிகளுக்குப் பார்வையிடச் சென்ற எம். பிக்களையும் பொலிசார் தடுத்து நிறுத்தினர் என்றும் கூறினர்.

பாரபட்சமற்ற விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டால் இச்சம்பவங்களுக்கு யார் காரணம் என்ற உண்மை தெரியவருமென்றும் திரு. அமிர்தலிங்கம் சொன்னர்.

### யாழ். நகரில்

### பலத்த மழை

யாழ்ப்பாணம், வெள்ளி

நீண்ட நாட்களாக நிலவிய கடும் வரட்சியின்பின், நேற்று இரவு கடும்மின்னல் குளிர் காற்றுடன் மழை பெய்தது.

### அகதிகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காலிகமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

இங்கிருந்து அவர்களது உறவினர் வீடுகளுக்கும் அவர்களது வீடுகளுக்கும் உடனுக்குடன் அனுப்புவதற்கும் பஸ் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஒழுங்குகளையும் அகதிகளைக் கவனிப்பதற்கான ஏற்பாடுகளையும் அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் ஆகியோருடன் கோப்பாய்ப் பிரதிநிதி, யாழ்ப்பாணப் பிரதிநிதி ஆகியோரும் செய்துள்ளனர்.

## இவர்களை நிரந்தரமாக்கக் கோரிக்கை

மட்டுவில், வியாழன்

''கைதடி வயோதிபர் இல்லத்தில் பத்து ஆண்டுகள் சேவை புரிந்தும் சேவை நிரந்தரமாக்கப்படாத சிற்றூழியர் பலர் இருக்கிறார்கள். இவர்களின் சேவையைநிரந்தரமாக்க எமது எம். பி. ஆவனசெய்ய வேண்டும்.''

இவ்வாறு கைதடி வயோதிபர் இல்லத்தைச் சேர்ந்த வயோதிபர் ஒருவரான திரு. பொ. மாணிக்கவாசகர் சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவரத்தினத்திடம் ஓர் அன்பான வேண்டுகோளைவிடுத்தார்

சுமார் பத்து ஆண்டுகளுக்கும் அதிகமாகச் சேவை செய்த பல தமிழ் சிற்றூழியர் சேவை நிரந்தரமாக்கப்படாமல் இவ்வில்லத்தில் இன்னும் சேவையில் இருக்கிறார்களென்றும் அதேவேளையில் தென்இலங்கையிலிருந்துவந்த சிலர் இரண்டொரு ஆண்டுகளில் நிரந்தரமாக்கப்பட்டு விட்டார்களென்றும் இப்பரிதாப நிலையை எம். பி. தீர்த்துவைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இதைத் தொடர்ந்து இப்படியான விஷயங்களை ஆராய்ந்து, எம். பிக்கு ஆலோசனை கூறுமுகமாக, ஒரு ஆலோசனை சபையும் அங்கு நியமிக்கப்பட்டது. இதில் நான்கு வயோதிபர்களும், ஒரு ஊழியரும் அங்கம் வகிக்கிறார்கள். இவர்கள் அங்குள்ள நிலைகளை ராய்ந்து அதை எம். பி. ஐயம் செய்யும்போது அவருக்குக் கூறுவார்கள். (அ)

### துப்பாக்கியை பறித்தனர்

யாழ்ப்பாணம், வெள்ளி

நேற்று முன்தினம் இரண்டு அரசாங்க உயர் அதிகாரிகளின் வீட்டினுள் புகுந்த இளைஞர் கோஷ்டியொன்று அவர்கள் வசமிருந்த இரண்டு துப்பாக்கிகளைப் பயமுறுத்திப் பறித்துச் சென்றதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

### குழாய்க்கிணறு

### ஆய்வுவேலைகள் நடக்கின்றன

வண்ணார்பண்ணை, வியா.

புங்குடுதீவு தண்ணீர் தட்டுப்பாட்டை நீக்க குழாய்க்கிணறு அமைப்பதற்கு ஆய்வு நடைபெறவிருக்கின்றன.

வேலணைப்பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. எம். சுப்பிரமணியம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றார்.

குழாய்க்கிணற்றின் மூலம் புங்குடுதீவுப்பகுதியில் நல்ல நீர் பெறலாம் என்று தாம் கருதுவதாகவும், இதனால் இது பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்துவருவதாகவும் அவர் தெரிவித்தார். புங்குடுதீவில் குழாய்க்கிணற்றுத்திட்டம் சாத்தியப்படும் பட்சத்தில் இக்கிராமத்திற்கு நீண்டகாலமாக இருந்துவந்த குடிநீர்ப்பிரச்னை தீர்வதுடன், இப்பகுதி மக்களின் பொருளாதாரமும்உயர வாய்ப்பு ஏற்படும்.

## கலகத்துக்கு என்ன—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் மற்றைய சில பகுதிகளிலும் துரதிருஷ்டவசமாக நடைபெற்ற அசம்பாவிதங்கள் குறித்து நான் மிகவும் வருத்தப்படுகின்றேன். இச்சம்பவங்கள் குறித்து விசாரணைகளை நடத்த விரைவில் ஆணைக்குழு வொன்று நியமிக்கப்படும்.

''தீவைப்பு, கொள்ளையடித்தல்மற்றும் அசம்பாவிதங்களில் சம்பந்தப்பட்டார்கள், இன, மத, அரசியல் வேறுபாடுகளின்றி கைது செய்யப்படுவார்கள் என்பதை இங்கு நான் உறுதியுடன் கூறவிரும்புகின்றேன்.

### ''எல்லோரும் சமமே''

''இந்த நாட்டில் எல்லோரையும் சமமாகவே அரசுகருதுகின்றது. நாட்டின் சகல பிரஜைகளையும் நான். நீதியின் அடிப்படையில் சமமாகவே கருதுகின்றேன். சமாதானமாக வசழ எல்லோருக்கும் உரிமை உண்டு.

### ''யாழ்ப்பாண சம்பவங்கள்''

''யாழ்ப்பாணத்தில் தலைதூக்கிய அசம்பாவிதங்கள் குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது, நான் உடனடியாகவே நடவடிக்கைகளை மேற்கொண்டேன். விபரங்களை நேரில் கண்டறியும் பொருட்டும், தகுந்த நடடிக்கைகளை உடனடியாகவே மேற்கொள்ளும் வகையிலும் நான், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல், இராணுவத் தளபதி ஆகியோர் தலைமையில் சிரேஷ்ட அதிகாரிகள் அடங்கிய குழுவொன்றை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தேன்.

''நாட்டில் எந்த இடத்திலும், என்ன நடந்தாலும், அவை உடனடியாக தேசிய அரசுப்பேரவை உறுப்பினர்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்படும். எந்த விஷயத்தையும் மூடிமறைக்க வேண்டிய அவசியமில்லை.

''யாழ்ப்பாணத்தில் அசம்பாவிதங்கள் தலைதூக்கிய போதிலும், ஊரடங்குச் சட்டத்தை அங்கு அமுல்செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை இதனை, எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கமும் ஏற்றுக்கொண்டார்.

### ''பொறுப்புடன் பேசவேண்டும்''

''தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மிகவும் பொறுப்புடன், நிதானமாகப் பேசவேண்டும். வார்த்தைகளை அள்ளி வீசிவிடக்கூடாது. கிளர்ச்சிகளைத் தூண்டும் வகையில் பேசுவது விருப்பத்தக்கதல்ல மேடைகளில் பொறுப்பற்ற முறையில் பேசுவதாகவும், நெப்போலியன் என்றும் திருகோணமலையைத் தலைநகரமாக்கப் போவதாகவும் தமிழர் தடுதலைக் கூட்டணியினர் பேசிவருவதாக நான் அறிகின்றேன். இது விஷயத்தில் அவர்கள் நிதானமாக நடந்து கொள்ளவேண்டும்'' என்று பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தனது உரையில் கேட்டுக்கொண்டார்.

### மாண்ட...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கிப்பிரயோகச் சம்பவங்கள் பற்றி பிரதமர் குறிப்பிடுகையில் தமிழர்கள் தங்களைப்பாதுகாத்துக் கொள்ள தற்பாதுகாப்புக்காகவே துப்பாக்கிப்பிரயோகம் செய்துள்ளனர் என்று தெரிவித்தார்.

#### சேதவிபரம்

இதனுடன் சேதவிபரங்கள் பற்றியும் பிரதமர் அறிவித்தார்.

மாத்தளையில் இரு கடைகள் கெக்கிராவையில் இரண்டு கடைகள், நொச்சியாகாமத்தில் ஐந்து வீடுகள், தம்புல்லையில் 10 வீடுகள், கலிகமுவவில் மூன்று கடைகள், மாஹோவில் பதினெட்டுக் கடைகள், தெஹிவளையில் ஒரு கடை, பேலியகொடையில் மூன்று கடைகளும், பாணந்துறையில் பதினேழு கடைகளும் தீக்கிரையாக்கப்பட்டிருக்கின்றன என்று பிரதமர் அறிவித்தார்.




6-05 சைவ நற்சிந்தனை, எஸ். திருநாவுக்கரசு, 6-10 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-50 ஞானமிர்தம் வசந்தா வைத்தியநாதன், 7-00 திருமுறைப் பாடல்கள் எம். வேதாரணியம், 7-35 இசைக்கோவை, மாலை 6-20 பொலிசாரும் நாமும், 6-30 அஞ்சல் கொழும்பு ஸ்ரீமுத்துவிநாயகர், ஆலயத்திலிருந்து பூசையும் பஜனையும், 7-02 நாடக மேடைப் பாடல்கள் செனகப்பு நாடகத்திலிருந்து சில பாடல்கள் அ. தாவீதியல், 7-35 அருளமுதம் மாணிக்க வாசகர் சித்திரம், க. கணபதிப்பிள்ளை, 8-05 கிறுஅத், 8-15 இஸ்லாமியகீதம், 8-30 மாதர் மஜலிஸ், 9-30 நாகசுரம், மு. பஞ்சாபிகேசன், 10-15 பக்திப்பாடல் சீர்காழி கோவிந்தராஜன்.

(முஸ்லிம் நிகழ்ச்சி நேரம் மாற்றத்துக்குரியன).

......

கடன்பணம்

### பதிவுத்தபால் மூலம் கிடைக்கும்

வண்ணார்பண்ணை, வியா

''யாழ். தேசிய வீடமைப்பு இலாகாவில் கடன் பெறுபவர்களுக்கான பணம் இவ்விலாகாவினால் நேரடியாக கொடுபட மாட்டாது. விண்ணப்பதாரர்களது கடன்பணம் அவர்களது வீட்டுக்கு பதிவுத்தபாலில் செக் மூலமாக அனுப்பப் படும்'' என்று யாழ்ப்பாண தேசிய வீடமைப்பு இலாகா ஆணையாளர் திரு. எம். இராசரத்தினம் தெரிவித்தார்.

இவ்விலாகாவில் நடந்த இல காசோலை மோசடிகளைத் தொடர்ந்து ஆணையாளர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார். இவ்விலாகாவிலிருந்து விண்ணப்பதாரர்களுக்கு கிடைக்க வேண்டிய காசோலைகள் சில வேறு நபர்களால் கைமாறப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது. இது சம்பந்தமாக பொலிசில் முறையீடுகள் செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் அறியப்படுகிறது.

......

### 1 மாதத்திற்குள் பென்ஷன்

கொழும்பு, வியாழன்

அரசாங்க ஊழியர்களின் பென்ஷன்பணத்தை அவர்கள் ஓய்வு பெற்ற ஒரு மாத காலத்திற்குள் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

அரசாங்க ஊழியர்கள் ஓய்வு பெறுவதற்கு 6 வாரங்களுக்கு முன் ஓய்வுபெறுவதற்கான சகலவிபரங்களுமடங்கிய விண்ணப்பத்தை பென்ஷன் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்குமாறும் அமைச்சர் கேட்டுள்ளார். (இ)

### ''நாவலர் நூல்களையும் சேர்க்கவும்''

வேலணை, வியாழன்

கல்விப்பகுதியினரின் புதிய கல்வித்திட்டத்தின் திருத்தத்தில் சைவ சமயப் பிரிவுக்கு சைவசமயவளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரால் எழுதப்பட்ட சைவவினாவிடை பாலர் பாடம் போன்ற நூல்களை பாடசாலைகளின் சமயபாடப் புத்தகங்களில் ஒன்றாக அங்கீகரிக்கும்படி கல்விமந்திரியைக் கேட்டுக் கடிதமொன்றை யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைச் செயலாளர் சைவப்புலவரும், விஷக்கடி வைத்தியருமான திரு. மு. க. சிற்றம்பலம் எழுதியுள்ளார். (அ)

# "இரண்டாவது முறை சுட்டதும் இருவர் விழுவதைக் கண்டேன்"

## மரணவிசாரணையில் இன்ஸ்பெக்டர் சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி. கடந்த செவ்வாய்க்கிழமையும், புதன் கிழமையும், யாழ்ப்பாணப்பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டவர்கள் மீதான விசாரணை நேற்று யாழ். நீதிமன்ற நீதவான் திரு.கே.வி. நவரத்தினத்தின் முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணை 2.10 க்கு ஆரம்பமானபோது யாழ் மாவட்ட வைத்திய அதிகாரி திரு சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம் துப்பாக்கிச் சூட்டினால் இறந்தவர்களின் பிரேத பரிசோதனை அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார். முதலில் சண்முகராசா ஆனந்தவேலின் மரண அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து நீதவானின் கேள்விகளுக்குச் சட்டவைத்திய அதிகாரி பதிலளித்தார்.

**நீதவான்:** யார் உடலை அடையாளம் காட்டினார்கள்?

**ச.வைத்திய அதிகாரி:** இறந்தவரின் சகோதரன் ஜெகதீஸ்வரராஜாவும், இறந்தவரின் அயலவரான வி அம்பலவாணர் என்பவரும் அடையாளம் காட்டினார்கள்.

**நீதவான்:** இறந்தவர் எவ்வாறு இறந்தார்

**ச.வைத்திய அதிகாரி:** இறந்தவரான சண்முகராஜா ஆனந்தவேல் என்பவர் துப்பாக்கிச் சூட்டினாலேயே கொல்லப்பட்டுள்ளார். இவரது மார்பில் பாய்ந்த துவக்கு ரவைகள் அவரது இருதயத்தைப் பிளந்துள்ளதாலேயே இம் மரணம் சம்பவித்துள்ளது. இறந்தவர் வேட்டியும் சேட்டும் அணிந்திருந்தார்.

**நீதவான்:** இவர் எவ்வளவு அடி தூரத்தில் வைத்துச் சுடப்பட்டிருக்கலாம்.

**வை.அதிகாரி:** 100 யாருக்கும் 300 யாருக்குமிடைப்பட்ட தூரத்திலவைத்து இவர்கள்சுடப்பட்டிருக்கலாம். இதைமீடியம் றேஞ்ஜ் என்று சொல்லலாம்

இறந்த இரண்டாவது நபரானபாலசிங்கம்பாக்கியராஜா அல்லது ரவி என்பவரும் துப்பாக்கிச் சூட்டினாலேயே இறந்திருக்கிறார் இவருக்கு ஏற்பட்ட மரணம் ஒரு குண்டினாலேயே ஏற்பட்ட போதிலும் இரு காயங்கள் இவரது உடலில் காணப்பட்டன. ஒன்று இடது பக்கக் கையின் மணிக்கூட்டிற்கு அருகிலும் வயிற்றின் இடதுபக்க அடிப்பக்கத்திலும் குண்டு பாய்ந்துள்ளதால் இவர் இறந்துள்ளார்

**நீதவான்:** இவரை யார் அடையாளம் காட்டினார்கள்.

**வை.அதிகாரி:** இறந்தவரது மாமனாரான சின்னையா விஸ்வரத்தினமும் இறந்தவரது மைத்துனரான கே. சிவராஜா என்பவரும் இறந்தவரை அடையாளம் காட்டினார் என்றார்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது துப்பாக்கிப்பிரயோகம் செய்த பொலீஸ் படைக்குப் பொறுப்பாகவிருந்த உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கான் விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

**நீதவான்:-** சம்பவம் நடந்ததினமான 16-ம் திகதி செவ்வாயன்று நீர் எங்கிருந்தீர்.

**கான்:-** சம்பவதினம்நான் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் இருந்தபோது யாழ்ப்பாணப் பகுதியில் அசம்பாவிதங்கள் நடப்பதாகவும் என்னை அங்கு செல்லுமாறும் எனது மேலதிகாரியின் உத்தரவின் பேரில் அங்கு சென்றேன். என்னுடன் 10 பொலிஸ்காரர்கள் இருந்தார்கள்.

**நீதவான:-** உங்களிடம் ஆயுதம் இருந்ததா?

**கான்:-** ஆம் என்னிடம்25ரவைகள் போட்டுச்சுடும் கைத்துப்பாக்கியும் டொலிஸாரிடம் ரைவிளும் இருந்தன நாங்கள் சீ. எஸ். கே. சந்திக்குச்சென்றசமயம் அங்குபெரிய கல்லுகளும், தகரமும், ரயர்களும் வைக்கப்பட்டு எரிக்கப்பட்டன. இதனால் நானும் எனதுசக ஊழியர்களும் அவற்றை அப்புறப்படுத்திவிட்டு அப்பால் சென்ற சமாயம் ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதிச் சந்தியில் ராமநாயக்கா என்னைச் சந்தித்து 3 ஆயுதம் தாங்கிய பொலிசாரைத்தரும் படி கேட்டார். நான் மூவரை அனுப்பி விட்டு ஏழு பொலிஸ் கன்ஸ்டபிள்களுடன் நின்ற போது அந்த இடத்தில் 200க்கு மேற்பட்ட மக்கள் நின்று சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

**நீதவான்:** என்ன சொல்லிச் சத்தம் போட்டார்கள்?

**திரு.கான்:** அதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. பின்னர் மின்சார நிலைய வீதியாலும் கஸ்தூரியார் வீதியாலும் போனபோது பலர்கூடி நின்று கடைகளை உடைப்பதையும், அவற்றிற்குத் தீவைப்பதையும் அங்கிருந்த பொருட்களை எடுத்துச் செல்வதையும் கண்டேன்.

**நீதவான்:** அவர்களில் எத்தனைபேர் இருந்தார்கள்?

**கான்:** சுமார் 500 பேர் வரையில் இருந்தார்கள் நான் அவர்களைப்பார்த்துச் சொன்னேன் நீங்கள் இந்த இடத்தை விட்டுச் செல்லாவிட்டால் நான் உங்களை சுட நேரிடும் என்று மூன்றுமுறை எச்சரித்தேன். அவர்கள் அந்த இடத்தைவிட்டு அகலவில்லை. அவர்கள் கல்லுகளாலும் பொல்லுகலாலும் எங்களை நோக்கி எறிந்தார்கள்.

**நீதவான்:** அவர்கள் எங்கிருந்தார்கள்? அவர்களுக்கும் உங்களுக்குமிடையில் எவ்வளவு தூரமிருந்திருக்கும்?

**கான்:** அவர்கள் ராஜ்கோபால்ஸ் கடைக்குப் பக்கத்தில் நின்றார்கள் சுமார் 40-50 யார் தூரத்தில் நின்றார்கள்.

**நீதவான்:** உங்களில்யாருக்காவது காய மேற்பட்டதா?

**கான்:** எவருக்கும் காயம் ஏற்படவில்லை நான் மீண்டும் அவர்களை மூன்று முறை எச்சரித்தேன். அப்போது பெரிய சத்தம் அவர்கள்பக்கமிருந்து கேட்டது. அவர்கள் அசையவில்லை. உடனே என்னுடன் நின்ற பொலிஸ் கன்ஸ்டபிள்களில் ஐவரைத் துப்பாக்கியில் குண்டுகளைப் போடுமாறும் அவற்றை ஒருமுறை சுடுமாறும் கட்டளையிட்டேன். ஐந்து கன்ஸ்டபிள்களும் சுட்டார்கள் ஆனால் அதனால் எந்தவித பயனும் ஏற்படவில்லை அதனால் இரண்டாவது தடவையும் சுடும்படியும் கட்டளையிட்டேன்.

**நீதவான்:** முதல் சூட்டிற்கும் இரண்டாம் சூட்டிற்கும் இடையில் எத்தனை நிமிட இடைவெளியிருந்தது?

**கான்:** இரண்டு நிமிட இடைவெளி.

**நீதவான்;** இரண்டாவது சூட்டால் ஏதாவது சம்பவம் நடைபெற்றதா?

**கான்:** இருவர் நிலத்தில் விழுவதைக் கண்டேன் மற்றவர்கள் ஓடிவிட்டார்கள். விழுந்தவர்களில் ஒருவரை இருவர் இழுத்துச் செல்வதைக் கண்டேன். மற்றவர் வீதியில் கிடந்தார். நானும் திரு. சாம்சனும் காயப்பட்டவரை அணுகி அவரைப் பார்த்தபோது அவரது உடலெல்லாம் இரத்தமாகவிருந்தது நான் அவரிடம் உமது பெயர் என்ன என்று கேட்டபோது அவர் பதில் சொல்லவில்லை பின்னர் நானும் சாம்சனும் அவரை ஜீப்பில் ஏற்றிச் சென்று அரசினர் பெரியாஸ்பத்திரியில் அனுமதித்தோம்.

**நீதவான்:** யாரிடம் ஒப்படைத்தீர்.

**கான்:** ஆஸ்பத்திரியில் நின்ற ஒருவரிடம் அவர் டாக்டராக இருக்கலாம் என்று நினைக்கிறேன்.

**நீதவான்:** நீர் யாரென்றுவது அவர்களிடம் கூறினீரா?

**கான்:** நான் யாழ்ப்பாணம் பொலிசைச் சேர்ந்தவன் என்று கூறினேன். ஆனால் அவர்கள் அதை எழுதினார்களோ தெரியாது.

விசாரணையின்போது துப்பாக்கிச் சூட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிகளை காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபரும், திரு. பத்மநாதனும் நீதவான் முன் சமர்ப்பித்தனர்.

விசாரணையை நாளைக் காலை 10-30க்கு நீதவான் ஒத்தி வைத்தார். இன்றைய விசாரணையில் திருவாளர்கள் முன்னாள் செனட்டர் திரு. சு. நடராஜா, ஆர். விஸ்வநாதன், ஜிம்மி ராஜரத்தினம், எஸ். லோகேஸ்வரன், த.சோமசுந்தரம், நடராஜா, கே. சற்குணநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (கா)

---

நேற்றுப்பகல் நடந்தது!

# துப்பாக்கி முனையில் 2 'கார்கள்' கடத்தல்!

யாழ்ப்பாணம், வெள்ளி. யாழ்ப்பாணத்தில், பொலிஸ், இராணுவம், கடற்படையின் பலத்த ரோந்து-பாதுகாப்புகளின் மத்தியில் நேற்றுக் காலை கைத்துப்பாக்கி முனையில் இரண்டு கார்கள் கடத்தப்பட்டன!

இத்துணிகரச் சம்பவம் நேற்றுப் பகல் தாவடியிலும் கொக்குவிலிலும் நிகழ்ந்தது!

நேற்றுக் காலை சுமார் ஒன்பதரை மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து கே கே. எஸ். வீதிவழியாக வந்து கொண்டிருந்த 'வொக்ஸ்வாகன்' கார் ஒன்று திடீரென சிலரினால் இடைமறிக்கப் பட்டதாம். இவர்களில் இருவரின் கைகளில் கைத்துப்பாக்கி இருந்தது என்றும், பயத்தின் காரணமாக காரிலிருந்தவர்கள் இறங்கியதும், அந்த நபர்களினால் கார் கடத்தப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இதன் பின்னர் அதேவீதியில் இரண்டாவது கார்க் கடத்தல் சம்பவம் நிகழ்ந்தது.

நேற்றுப் பகல் பதினொன்றரை மணியளவில், கே கே. எஸ். வீதி வழியாக குளப்பிட்டிச் சந்திக்கு சுமார் இருநூறு யார்த் தூரத்தில், யாழ்ப்பாணத்திலிருந்து வந்து கொண்டிருந்த '404' வெள்ளை நிறக்கார் ஒன்று ஐந்து பேரினால் தடுத்து நிறுத்தப்பட்டதாம். இவர்களில் ஒருவரின் கையில் கைத்துப்பாக்கி இருந்ததாகக் கூறப்பட்டது. கைத்துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்திய அவர்கள், 'கெற் அவுட்' என்று கூறி காரிலிருந்தவர்களை இறக்கிவிட்டு காரைகடத்திச் சென்றனராம்.

இந்தக் காரில், நைஜீரியா உணவு விவசாய ஸ்தாபனத்தைச் சேர்ந்த டாக்டர் எம். ராமசாமி, அவரது மகன் சவூதி அரேபியாவில் கடமை புரியும் டாக்டர் ரஞ்சன் ராமசாமி, மற்றொரு மகன் கார்ச் சாரதி ஆகியோர் இருந்தனராம். இக்கார்க் கடத்தல் பற்றி பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. கார்கடத்தப்பட்ட போது விலைஉயர்ந்த மூன்று காமராக்களும் மற்றும் உடமைகளும் காருக்குள் இருந்ததாக, புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# நீதிமன்றக் கடமைகளைப் பகிஷ்கரிக்க முடிவு

## யாழ். வழக்கறிஞர் சங்கம் தீர்மானம்

யாழ்ப்பாணம், வெள்ளி. பொதுமக்களுக்கு எதிராகவும், சட்டத்தரணிகளுக்கு எதிராகவும் ஆக்கிரமித்தல் காடைத்தனம், அவமானப்படுத்தல் ஆகிய முறைகளில் கட்டுக்கடங்காத நடவடிக்கைகளில் பொலிசாரும், ஆயுதப் படைகளும் ஈடுபடுவதால் நீதிமன்றங்களிலோ அல்லது வேறு நீதிஸ்தலங்களிலோ தமது வழமையான கடமைகளைச் செய்வதில்லை என்று யாழ். சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

நேற்று யாழ்ப்பாணத்தில் கூடிய அவசர கூட்டத்திலேயே மேற்கண்டவாறு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இத்தீர்மானத்தின்பிரதிகளை பிரதமமந்திரி, நீதி அமைச்சர், பிரதம நீதியரசர், அட்டோர்ணிஜெனரல், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் வடபகுதியில், உள்ள சகல நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கும் அனுப்பிவைப்பதென்றும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பொது மக்கள் பொலிசாருக்கோவேறுஅதிகாரிகளுக்கோ முறைப்பாடு செய்ய முடியாத காரணத்தினால் எழுத்து மூலமோ அன்றி வாய்முறைப்பாட்டு மூலமோ பொலிசாரினதும் ஆயுதப் படைகளினதும் காடைத்தனம், அவமானப்படுத்தல், வன்முறைப்படுதல் ஆகிய நடவடிக்கைகள் பற்றிய முறையீடுகளை பொதுமக்களிடமிருந்து பெற்று மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ள சட்டத்தரணிகள் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது

இக்குழுவில் அங்கம் வகிக்காத சட்டத்தரணிகளும் பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகளைப் பெற்று இக்குழுவுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### நலன்களைக் கவனிக்க கஷ்டமில்லை

தமது வழமையான கடமைகளை செய்யாது விடுவதென தீர்மானிக்கப்பட்டிருந்தபோதிலும் வன்செயல்களால் பாதிக்கப்பட்டோரின் நலன்களைக் கவனிக்க எதுவித கஷ்டங்களுக்கு மத்தியிலும் சட்டத்தரணிகள் தயாராகவுள்ளனர் என்று மேற்படி குழுவின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இக்குழுவினரின் விபரம் வருமாறு:

திருவாளர்கள் ஜிம்மி இராசரத்தினம் (தலைவர்), சிவா கணேசன், கே. கனகசபாபதி, ஏ. அன்ரனி, எஸ். விமகாதேவா, ஆர். பாலசுப்பிரமணியம், ஏ. அந்தோனிப்பிள்ளை, ஜேசுதாசன். (இ)

---

# யாழ். வளாகமும் மூடப்பட்டது

யாழ்ப்பாணம், வெள்ளி. இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாகம் காலவரையின்றி மூடப்பட்டுள்ளது.

வளாகத்தை மூடுவதென்ற முடிவை நேற்று முன்தினம் யாழ். வளாகத் தலைவர் பேராசிரியர் கா. இந்திரபாலா எடுத்தார்.

இவ்வளாகத்தில் கல்வி கற்ற வெளி இடங்களைச் சேர்ந்த மாணவர்கள் சொந்த ஊர்களுக்குத் தகுந்த பாதுகாப்புடன் அனுப்பிவைக்கப் பட்டுள்ளனர். (கு-சு)

---

# 20கடிகாரங்கள் மீட்பு

கொழும்பு, வியாழன். தெகிவளை பாலத்திற்கு அருகாமை உள்ள விடொன்றிலிருந்து தெகிவளை பொலிசார், 20 கைக்கடிகாரங்களையும் 3சோடி ஜீப்ஸீ, கூலிங் கிளாஸ், ஆகியனவற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

தெகிவளை கடற்கரைக்கு வரும் இளம் தம்பதிகளிடமிருந்து களவாடப்பட்ட பொருட்களே இவை என பொலிசார் கருதுகின்றனர்.

இது தொடர்பாக மூவரைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர். (இ)

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka